
Koviloor Digital Library

நித்திலம்


கலை இலக்கியத் திங்களிதழ்

kmm0960

960







அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதும்
சூழ்வினை சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்.

Koviloor Digital Library

குளித்தலை நல்லாசிரியை

எமது

இளமுருகு பொற்செல்வி

அவர்கள்

24-4-1974 ஆம் நாளன்று

புதுதில்லியில்

தேசியவிருது பெறுவதறிந்து

மட்டற்ற மகிழ்ச்சியடைந்து

பாராட்டுகின்றோம்.



உள்ளுறை

*

1 தமிழுள்ளம்

2 வாழ்க தாயகம்

3 நித்திலமே வாழ்க நிலைத்து

4 உணர்வோம்

5 கிரியிற் கிரியுருகுங் கேட்டு

6 இயற்கைக்கோர் எழில் விழா

7 நித்திலம் வாழ்க

8 இசைப் பழக்க முறை

9 நித்திலம்

10 ஆய்வரங்கம்

11 வேரிலும் கலைப்பொருட்கள்

12 கமுக்கமாய் வருக

13 வள்ளுவன் கண்ட காமம்

14 முப்பாலதிகார அடைவு மூவைம் மண்டிலம்

15 கந்தனைப்போல்

16 காட்டிலொரு கல்யாணம்

★★

அட்டைப்பட விளக்கம்

தமிழ்த் தாய்மொழி போற்றும் தகைமை சான்றீர் 1

சென்ற 1968ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 3ஆம் நாள் புதனன்று இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு குறித்து சென்னையில் வண்டிகளில் பண்டைத் தமிழரின் படைப்புச் சின்னங்கள் ஊர்வலமாகச் சென்றனவன்றோ? அவற்றுளொன்று கண்ணகி வழக்கு உரைக்கும் உருவினைக்கொண்டது. அவ்வண்டியில் இளங்கோ உரு ஒன்று நன்கே அமைக்கப் பெற்றிருந்தது. அவ்வுருவே இந்நித்திலத்தின் அட்டைப்படமாகத் திகழ்கிறது. இளங்கோவடிகட்கு இதுகாறும் ஒன்றிய வகையில் உருக்கொடுக்காத நாம், இனியேனும் உலகத் தமிழ்க் கருத்தரங்கு (இரண்டாவது) சென்னை மாநகரில் நடந்த நினைவிலேனும், இவ்வுருவினையே இளங்கோவடிகளின் உருவாக் கொள்வோம்.

Koviloor Digital Library 100

நித்திலம்

கலை இலக்கியத் திங்களிதழ் முத்தமிழ் மாதிகை.

ஆசிரியர் :

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்,

ப. சுந்தரேசன்,

திருக்குடந்தை.

துறை உ.	தி.பி. 2005. தை முதல் பங்குனி வரை. கி. பி. 1974 சனவரி 14 முதல் ஏப்ரல் 13 வரை.	முத்து: க-ங

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

— *அறிவுறுத்தல்*

ஆசிரியரும் வெளியிடுவோரும்: குடந்தை, ப. சுந்தரேசன்.
அச்சிடுவோர்: ஜெமினி அச்சகம், மடத்துத்தெரு, குடந்தை.

Koviloor Digital Library

தமிழுள்ளம்



அறிந்து தெரிந்து
உணர்க.

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.

பெருஞ்சித்திரனார் குமணனைப்பாடியது. புறநானூற்றுப்பாடல் 163

Koviloor Digital Library

வாழ்க தாயகம்

[கவியரசு முடியரசன், காந்திபுரம், காரைக்குடி.]

பண் : ஆசான்திறமாய காந்தாரம் (மோகனம்)

தாளம் : நான்கொத்து

வாழ்க தாயகம் — அம்மா
வாழ்க நீயகம் — வாழ்க

உயிர்நீ உடல்நீ உளம்நீ வளம்நீ
பயிர்நீ பயன்நீ பயன்தரு பொருள்நீ
வெயில்நீ மழைநீ விழிநீ மணிநீ
பயில்தரு சுவைநீ பழகிய மொழிநீ — வாழ்க

வெளிநீ வளிநீ புனல்நீ அனல்நீ
விளைவுறு நிலம்நீ விதைநீ முளைநீ
ஒளிநீ கதிர்நீ உயர்வுறு மலைநீ
அளிநீ தொழில்நீ அளவில் கலைநீ — வாழ்க

பிறந்தோம் தவழ்ந்தோம் பிணைந்தோம் நடந்தோம்
திரிந்தோம் மகிழ்ந்தோம் திருவாழ் மடியில்
சிறந்தோம் பயின்றோம் சிரித்தோம் வளர்ந்தோம்
நிறைந்தோம் உயர்ந்தோம் நினைவோம் உனையே.
— வாழ்க

Koviloor Digital Library

திருக்குடந்தையில் **நித்திலம் பிறந்தது**
தி.பி.2004 சுறவம்(தை)14-1-1973 ஞாயிறன்று இந்நித்திலம் நல்ல ஊட்டத்தோடு பாதுகாக்கப் பெறல்வேண்டும்.

.. ... தமிழ்கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தல்........,

இயல், இசை, நாடகம் அனைத்தையுமே என்பது நமது குறிக்கோள். ஏனைய எல்லாத்துறையிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் தமிழுள்ளம் பெற்றோர் அனைவருக்கும் இந்நித்திலம் தொண்டுபுரியப் பிறந்து வளர்ந்து வருகிறது. வளர்க்கும் கடமை தமிழகத்தார் அனைவர்க்குமே உரியது.

முத்தமிழ்த்துறையில் இயல்பாகப் பொதிந்திருந்த, இருக்கின்ற இலக்கியமனைத்தையும் ஒல்லும் வகையானே உணர்ந்து அறிதற்குரிய இலக்கணங்களை வகுத்துரைத்து உணரும் தொண்டு புரிதலே நித்திலத்தின் கடன் அஃது அன்றிருந்தவற்றை, இன்றிருப்பவற்றை ....இனி........

என்கடன் பணிசெய்து கிடப்பதே

கவிஞர், கட்டுரையாளர் பாடி வரைந்து அனுப்ப வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

Koviloor Digital Library

நித்திலமே! வாழ்க நிலைத்து

'தெய்வக்கவிமணி'
க. சேதுராமலிங்கன்,
இராமேச்சுரம்.

1. சீராரும் முத்தமிழைச் செவ்வையுறச் சொல்வதற்கு
ஆராத இன்ப அமிழ்திசைப்பண் – ஆராய்ச்சி
வித்தகனார் கொண்ட விறல்மிகுந்த நித்திலமே
இத்தரையில் வாழ்க இனிது.

2. முத்தமிழில் நல்ல மூவாக் கருத்துக்கள்
நித்திலம்போல் தந்து நிலைபெறுவாய் – நித்திலமே
அத்தன் அருளால் அவனியினிற் பல்லாண்டு
முத்தமிழ்போல் வாழ்க முகிழ்த்து.

3. பண்ணாய் பசுவின் பகரும் புலமையெலாம்
திண்ணமுறக் கொண்டு திகழ்கின்ற - பண்ணினிய
நித்திலமே! நித்திலமே! நீணிலத்திற் பல்லாண்டு
உத்தமமாய் வாழ்க உவந்து.

4. முத்தமிழைச் செந்தமிழின் முத்திறத்தைக் கொண்டுவரும்
நித்திலத்தை, பண்ணின் நினைவதனை – இத்தரையில்
எல்லோரும் போற்ற இசைக்கின்ற நித்திலமே
மல்லலுடன் வாழ்க மகிழ்ந்து.

5. குடந்தைப் பசுவின் குடிலிருந்து தோன்றும்
திடமுடைய நித்திலமே! தேனே! – மடஇருளை
மாற்றும் மணிவிளக்கே! மாநிதியே! மண்ணியலில்
போற்றிப் புகழ்ந்து பொலி.

6. செந்தில் இறைவன் திருவருளாற் பல்லாண்டு
மைந்துடனும் நல்ல மகிழ்வுடனும் – செந்தமிழில்
முத்தாம் கருத்தை மொழிபணியை மேற்கொண்ட
நித்திலமே வாழ்க நிலைத்து.

Koviloor Digital Library

உணர்வோம்

தமிழ்மொழி

அமிழ்தினும் இனிய நந்தாய்த்தமிழ்மொழி மிகப் பழைய காலந்தொடங்கி இலக்கிய இலக்கண வகைகள் கொண்டு விளங்கிவருவது என்பதனை இனியும் எடுத்துக் கூறுதல் வேண்டுமோ? இக்காலச் சூழ்நிலையில் நாமும் நமக்கென உள்ளவற்றிற்கே ஒல்லும் வகை பணி புரிவோம்.

உலகில் தமிழ்மொழிமட்டும் இயற்றமிழ் இசைத் தமிழ் நாடகத்தமிழ் எனும் முப்பிரிவுகொண்டு மேன்மை பெற்ற சான்றோர்களால் அறிந்துணரப் பெற்றது ஏன்?

மற்றைய மொழிகளில் இயல் இல்லையா?
இசை இல்லையா?
நாடகம் இல்லையா?

இருக்கின்றனவே! அவ்வாறிருந்தும் அந்தந்த மொழியில் இயலையோ, இசையையோ, நாடகத்தையோ ஏன்? மொழியுடன் சேர்த்துக் கூறப்படாத வழக்கினை அறிந்தும் அம்மொழிவல்லார் கொண்டுள்ளனரே! நாம் கவல வேண்டா. அந்தந்த மொழியின் இயல்பு அதுவே.

தமிழ்மொழியில் மட்டும் கூறப் பெறுவானேன்? அறிய வேண்டாவோ?

இயல்	தமிழ்	இயற்றமிழ்
இசை	தமிழ்	இசைத்தமிழ்
நாடகம்	தமிழ்	நாடகத்தமிழ்
தமிழ்	இயல்	தமிழியல்
தமிழ்	இசை	தமிழிசை
தமிழ்	நாடகம்	தமிழ்நாடகம்

Koviloor Digital Library

இவ்வாறே முதன்முதல் எழுதியுணர்வோம். எல்லா உலகத்து மொழிகளும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பினைக் கொண்டு விளங்குவதியல்பு.

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழேனை.
மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?

எழுத்தாயினும் சொல்லாயினும் பொருளாயினும் எல்லாம் மக்களது வாழ்க்கை முறையைப் போலவே வாழ்வின் உயிர்த்திறம் விளங்க இயல்பாய் இருந்ததனை அறிந்து வரைந்து எடுத்து எழுதிக்கூறி இயற்றிச் செப்பம்பட்டிருக்கின்றன.

இவையாவற்றிற்கும் ஏதேனும் ஒரு அடிமனை முறை ஒன்று பொருந்தியிருத்தல் வேண்டுமன்றோ! அவற்றைத் தேடித் தேடியாராய்ந்து நித்திலமும் சிறு பகுதியாகவும் பெரும்பகுதியாகவும் வெளியிட முயற்சி செய்யத் தொடங்கியுள்ளது

அவையும் அறியப்பட்டதாகவும் இருத்தல்கூடும். அறியப்படாததாகவும் இருத்தல்கூடும். தெரிந்தும் வழக்கு வீழ்ந்ததாகவும் இருத்தல் கூடும். வழக்கில் இருந்தும் நன்கு உணரப்படாததாகவும் இருத்தல் கூடும். இருந்தும் இல்லாததாயும் . இல்லாது இருப்பதாயும் இருத்தல் கூடும். பழையனவாகவே இருத்தலுங் கூடும். இடைக்காலத்தன எனவும் எண்ணவுங் கூடும்.

Koviloor Digital Library

த்ற்காலத்தன எவை எனவும் ஆராய்ந்துணர அவர் கொள்ளக் கூடியவையாகவும் இருத்தல் கூடும். கொள்ளக்கூடாதனவாகவும் இருத்தல் கூடும். இன்னும் பலவாகவும் இருத்தல் கூடும் எல்லாம் அறிதல் இயலாததாயினும் ஒல்லும் வகையான் அறியலாமன்றோ!

எவை எவ்வாறுயினும் கற்றறிந்த சான்ரோர்களுக்கு நினைவு கொள்வதாகவும் அவ்வாய்ப்பில்லாதார் பலருக்கும் உணர அறிந்துகொள்ளப் பெறுவதாகவும் அமைதல் வேண்டுமென்பதே குறிக்கோள். ஆகவே நித்திலம் இயல் இசை நாடகத்திற்கே.

உழைக்க வளர்கிறது.

தொன்மைய, வாமெனு மெவையு நன்ருகாவின்று
  தோன்றிய நூலெனு மெவையுந் தீதாகாதுணிந்த
நன்மையினர் நலங்கொண் மணிபொதியு மதன்களங்க
  நவையாகா வெனவுண்மை நயந்திடுவர் நடுவாந்
தன்மையினர் பழமையழ காராய்ந்து தரிப்பர் (பூண்பர்)
  தவறுநலம் பொருளின்கட் சார்வாய்ந் தறிதல்
இன்மையினற் பலர்புகழி லேத்துவரே திலருற்
  றிகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென வொன்றிலரே.

இணருழ்த்தும் நாரு மலரனையர் கற்றது
உணரவி ரித்துரையா தார். — குறள்.

— பண்ணுய்வான்பசு.



Koviloor Digital Library

கிரியிற் கிரியுருகுங் கேட்டு

தமிழகப் பெருநாட்டில், ஒரு நேரத்தில் ஒரு மன்னரவை. பல புலவர்கள் கூடியிருக்கின்றனர். எல்லோருடனும் மன்னர் அளவளாவுகிருர். அக்காலத்திய அவை வழக்கங்களில் ஒன்றே, புலவர்களின் புலமையை விரைந்து அறிந்துகொள்ள வேண்டி சில வழக்கு முறைகளைப் பின்பற்றுதல். அவற்றில் ஒன்று ஈற்றடிகொடுத்து உடனே நேருக்குநேர் பாடச் செய்தல்.

ஈற்றடி கொடுக்கப்பட்டது. அதாவது கூறப்பட்டது. என்னவெனில்? அதுவே.

கிரியிற் கிரியுருகுங் கேட்டு என்பதாம்

இருகண்ணுந் தெரியாத புலவர் ஒருவர் செவியால் அவ்வீற்றடி கேட்டதுமே எடுத்தார்.

(மன்னர்பிரான் நன்ஞட்டில்)
மாலாம் பொன்னுச்சாமி மன்னவனுர் பொற்சபையில்
(மங்கையர்)
சேலாங்கண் மாதர் வாசிக்கும்யாழ் — நீலாம்
(பெரியகொடும்)
பரியிற் பரியதோர் பாலைதளி ரும்மா
கிரியிற் கிரியிருதுங் கேட்டு.

நீலாம்பரி என்பது ஓர் இராகம். பண் மேகராகக்குறிஞ்சி என்பதே அது. புலவர், பாலைதளிரும்மா. என்றெடுத்து கிரியிற்கிரியுருகுங் கேட்டு என்றதால் கிரியில் என்பது ஆகிரியில் என்பதாயிற்று. ஆகிரி என்பதும் ஓர் இராகம் புலவர் யாவர்? பழனி மாம்பழக்கவிச்சிங்க நாவலர்.

Koviloor Digital Library

இயற்கைக்கோர் எழில் விழா!

(சைவநன்மணி அரங்க. முத்துமணி, அரியலூர்.)

உலகத்தின் முதன்முதலில் மனிதன் தோன்றி
    உலவிட்ட இடம், குறிஞ்சி, பின்னர் முல்லை
நிலம்நாடிச் சீர்திருத்தி மருத மாக்கி
    நெஞ்செல்லாம் பூரிக்க நஞ்சை புஞ்சைப்
புலங்களிலே விளைவுதனைச் செய்து, வாழ்வைப்
    பொன்னாக்கி, நெல்லுடனே இஞ்சி மஞ்சள்
வளமான கரும்பெல்லாம் விளைத் தெடுத்து
    வையகத்தைச் செழிப்பாக்கும் வகையே செய்தான்!

பழனத்தில் அந்நாளில் உழவே செய்யப்
    பக்கத்தில் இருந்திட்ட பலாம ரத்தில்
கிழமான குரங்கொன்று கனியைக் கொய்ய
    கிடந்திட்ட சங்குகளை யெடுத்து வீசி
உழவர்களும் விரட்டுகின்ற காலை, அங்கே
    உயர்ந்திட்ட தென்னையிலே யேறிக் கொண்டு,
செழிப்பான இளநீரை உழவர் மேலே
    சீற்றத்தில் விட்டெறிந்த காட்சி யுண்டாம்!

நீறணிந்த நெற்றியினர் இறைவன் முன்னால்
    நிலம்பதித்து வணங்குகின்ற தன்மைபோல
ஆறுகளால் நல்மழையால் விளைந்த சாலி
    அழகாகத் தலைசாய்ந்து படுத்தி ருக்கும்
ஊறுதனை விளைக்கின்றக் குருவிக் கூட்டம்
    உட்கார வகையின்றி கரும்பை நாடும்,
சேறுகளே நிறைந்திருக்கும் வாவி யெல்லாம்
    சிரித்திருக்கும் தாமரைகள் தேனைச் சொட்டும்

Koviloor Digital Library

சுற்றிவரும் உலகந்தான் ஏரின் பின்னல்
சுற்றிவரும் யென்றிட்டான் வள்ளு வன்ருன்
கற்றவர்கள் நகரத்தில் இருப்போ ரெல்லாம்
கழனிகளில் விளைகின்ற நெல்லை யன்றி
மற்றவற்றை எத்தனை நாள் உணவாய்க் கொண்டு
மண்டிலத்தில் வாழ்ந்திடவே முடியும்? இங்கே
சற்றேநாம் சிந்தித்தால் குறளின் உண்மை
சரித்திரமாய் நிற்பதையே காணுகின்ருேம்.

ஆதவனும், காளைகளும், மழையும் காடும்
ஆதாரம் உழவனுக்கே, அவற்றை யெண்ணி,
தீதற்ற வள்ளுவனின் வழியில் வந்த
தென்னகத்தார் இயற்கையான திருநாள் ஒன்றை
வீதியெல்லாம் கொண்டாட வழிவகுத்தார்,
விளங்குகின்ற தைமாதம் பொங்கல் கண்டார்!
சாதிகளே தோன்ருத காலந் தொட்டு
சங்கமுடன் செந்தமிழும் கண்டா ரன்ருே!

பொங்கல்விழா! தமிழகத்தின் புனித நன்ஞள்!
புத்தரிசு தனைக் கொண்டு நெய்யும் பாலும்,
செங்கரும்பும் அருகிருக்கப், பொங்கல் வைத்து
சிந்தையெல்லாம் தமிழ்போல் இனிக்க, எங்கும்
மங்கலங்கள் குங்குமங்கள் மனையில் மின்ன
மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நாளாய்க் கண்டோம்
இங்கிதற்கே எந்தவொரு கதையும் இல்லை,
இயற்கைக்கே விழாவெடுக்கும் இனிய நாளாம்!

மன்னுபெறும் செல்வந்தான் மாடே யாகும்,
மாட்டுக்கும் பொங்கல்தனை வைத்த மாட்சி
பன்னருஞ்சீர் தமிழருடைப் பண்பை யெல்லாம்
படம்பிடிக்கும், காளைகளை அடக்கிக் காட்டிக்

Koviloor Digital Library

கன்னியரை மணந்திடுவர் அந்த நாளில்,
கண்ணபிரான் நப்பின்னைப் பிராட்டிக் காகத்
தன்னுடைய பலத்தாலே ஏழு காளை
தனைமடக்கி வெற்றிகொண்ட வரலா றுண்டு!

தொங்குகின்ற உலகத்தை "ஞாலம்" என்றார்,
தோய்ந்திட்டார் இயற்கையுடன் வாழ்வைச்
சேர்த்து
பொங்கலிட்டு மகிழ்ச்சியுடன் உண்ணுங் காலை
பொலிகின்ற இன்பத்தால் "பொங்கல்" என்றார்
செங்கரும்பும் செந்நெல்லும் வாழை யோடு
சேர்ந்ததனால் இல்லந்தான் சோலையாகும்!
இங்கதனை யெண்ணிட்டால் பொங்க லொன்றே
இயற்கைக்கு நாமெடுத்த எழில்வி ழாவாம்!

(வேறு)

அன்பெனும் பாலையூற்றி அறமெனும் நெய்யே சேர்த்து
தென்மொழி வள்ளுவன்றன் திருக்குறள் இனிப்பைக்
கூட்டி,
மன்பெறும் காதல்கூர, மனமெனும் வீட்டிலென்றும்
இன்பமாம் பொங்கல் வைத்து இயற்கையைப்
பாடுவோமே!

வெண்பா

"கன்னற் சுவையைவிடக் கன்னித் தமிழினிக்கும்,
பொன்னி நதியாய்ப் புறப்பட்டு—மன்னும்
தமிழர் மனையெல்லாம் தங்கிடுக இன்பம்,
அமிழ்தாக நிற்க அறம்!"



Koviloor Digital Library

நித்திலம் வாழ்க!

(புள்ளம்பாடி வெற்றியழகன்.)

சந்தம்: தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன — தனதான

வித்திட்டதை ஒட்டிச் சிறுமுளை
பட்டிட்டதை பற்றிப் படர்களை
வெட்டிட்டதை உற்றுப் பயிர்கறு — கறுவென்றே

மிக்குற்றதை முற்றக் கதிரறு
பட்டிட்டதை தட்டிப் பெருக,கு
வித்திட்டதை கட்டிக் கொடுமனை — யகம் சேர்த்து

வைத்திட்டதை குற்றிப் பிறகு,ச
மைத்திட்டதை தித்திப் பொழுக,சு
வைத்திட்ட 'தை' புத்தப் புதுதினம் — அதில் மாதர்

மக்கட்டிரள் ஒக்கக் களிமகிழ்
வுற்றுப்பரி திக்குப் படையலை
வைத்துத்துதி யிட்டுப் பரவிடும் — திருநாளில்

தித்தித்திடு சத்துற் றமிழ்தினை
ஒத்துற்றுல கத்திற் றிகழ்சுவை
சித்தத்திசை வித்துத் தனியெழில் — வளமேவி

திட்பப்பெரு மைக்குத் தகுதியின்
பெட்புற்றுயர் நுட்பத் திறனொடு
செப்பத்தியல் மற்றைத் தகவிசை — நடமாகி

ஒத்துப்புகழ் முற்றப் பெறுகுறள்
எட்டுத்தொகை மற்றைப் புறமகம்
உற்றப்பொருள் பற்றிப் பனுவலின் — திரளோடு

ஒப்பற்றுயர் வுற்றச் சிவநெறி
மெய்த்தத்துவ மிக்கத் தமிழ்தனி
உச்சப்புகழ் கிட்டத் திகழு 'நித்—திலம்' வாழ்க!

Koviloor Digital Library

★ இசைப் பழக்கமுறை ★

கற்கும் வகையில், இசைப்பயிற்சி, பெரும்பான்மையாக கருவியில் இசைநிலை தெளிவாக அமைந்துவிடும். அஃதும் கையினால் மீட்டி, அல்லது அழுத்தி, தேய்த்து, (வாசிக்கும்) இசைக்கும் கருவிகளில் மட்டுமே தெளிவாக அமையும். ஊது குழல் வகைகளில் சற்று குறைவாகிவிடும். ஊதுவோர் அதனை நன்கறிந்து குறைவின்றி விளங்கும் இசையொலி அறிவினைச் செவ்வகையாகவே உணர்ந்து ஊதுதல் வேண்டும்.

ஆனால் கண்டப்பாடல் (வாய்ப்பாட்டு) அறியாமலேயே இசைநிலை வழுவிப்போகும் தன்மையுடையது. மிகவும் விழிப்பாகவும், ஒலியறிவின்பால் கருத்தைச் செலுத்தியும் உழைத்து நல்ல சாதனம் செய்தாலன்றி தன்வயப்படாதுபோம். ஆயினும் கருவியிசை, இசையை மட்டும் காட்ட, கண்டப்பாடலோ, இசையையும், பொருள் பொதிந்த பாடலையும் காட்டப்பெறுவதால் வாய்ப்பாட்டே சிறந்ததாயிற்று.

யாழிசையையும், குழலிசையையும், குரலிசையையும் யாழ்ப்பாடல், வங்கியப்பாடல், கண்டப்பாடல் எனவே பண்டைய இசைத்தமிழ் நூல்களில் கூறப்பெற்றுள்ளன.



Koviloor Digital Library

அடியேனது இசைத்தமிழ்ப் பயிற்சி நூல் — க என்ற கருத்துப் பயிற்சி நூல் தங்கள் உதவியாலும், தங்கள் போன்ருரது பல்லோருதவியாலும் அச்சிட்டு வெளியிடப்பெற்றுளது.

அந்நூல் பாண்டி நாட்டுத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்க இசைத்தமிழ் வெளியீடாக, திருவள்ளுவராண்டு 2002 (விரோதிகிருது) வைகாசித் திங்கள் 18ஆம் நாள் முதல் 22ஆம் நாள் வரை அவ்வூர் திருத்தளிநாதர் ஆலயத்தில் நடைபெற்ற திருமுறை விழாவில் தமிழ்ச்சங்க நான்காமாண்டு இருநாள் விழாவான (வைகாசி 21, 22ஆம் நாட்கள்) 4—6—71 வெள்ளியன்று முதல்நாள் விழாவில் அன்று மாலை சிறப்பாக வெளியிடப்பட்டது.

அன்றைய சங்க அமைப்பு நம்பியாண்டார் நம்பி வாயில், அனபாயச் சோழன் காவணம், இராசராசசோழன் அரங்கம் என அமைந்திருந்தது. அன்று மாலை அவ்வாண்டு அச்சங்கப் புலவர் பேரவைத்தலைவர்கள் முன்பும், குழுமியிருந்த புலவர்கள் முன்பும், அவையோர்கள் முன்பும் திருமதி பத்மாவதி கணேசன் அவர்கள் அந்நூலினை அறிமுகம் செய்தார்கள். திருமிகு எம்.ஏ. முருகேசன் அவர்கள் (அறநிலையத்துறை துணை ஆணையர்) நூலினை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினுர்கள். நந்தமிழகத்தின் தலை சிறந்த நாடகத்துறை வல்லுனர் நடிகர்கோ திருமிகு தி. க. சண்முகம் அவர்கள் பாராட்டுரை வழங்கினுர்கள்.

இத்துணைக்கும் தோன்ருத் துணையாயிருந்து அருள்பாலித்த திருப்புத்தூர் திருத்தளி நாதர் திருவருளுக்கும், தோன்றும் துணையாயிருந்து அருள்பாலித்த தவத்திரு. குன்றக்குடி அடிகளார் (தெய்வசிகாமணி) அவர்களுக்கும் அடியேனது நன்றி என்றென்றும் உரித்தாகி உளது. அந்நூல் இனி இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெற வேண்டும்.

அந்நூல் அன்பர்களுக்கு விலையின்றி வழங்கப்பெறுகிறது. ஆயினும், நூல் பெறும் அன்பரிடத்தும் பிறரிடத்தும் சிறப்பாக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர் யாவரிடத்தும், மேலும் இசைத்தமிழ் நூல்கள் பல அச்சிடுவதற்கு நன்கொடை பெறவேண்டிப் பெரிதும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. முன் பணம் அனுப்புவோர் கூட்டுறவு முறையில் உதவிசெய்தால் உடனே அச்சிட்டு அனுப்பப்பெறும்.

Koviloor Digital Library

தங்களையும், தங்கள்போன்ற ஏனைய பெரியோர்களையும், மாணவ மாணவியர்களையும் நூல்பெற்று நன்கொடையளிக்கும் படிக் கேட்டுக்கொள்கிறேன். ஒல்லும் வகையானெல்லாம் பேருதவி புரிய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மிக்க வணக்கம். சிறப்புடையோர் திருமண நாள் குறித்தேனும், அறுபதாம் ஆண்டு நிறைவு குறித்தேனும் வெளியிட்டுக் கொண்டும் யாவருக்கும் வழங்கும் வாய்ப்பினைப் பெறலாம்.

பண்ணாராய்ச்சிவித்தகர்.



நித்திலம்

பாக்களம் யாப்பீடு: கட்டளைக் கலித்துறை.

மலைவெண்: 1 பேற்றெருப்ப ஈற்று நாள்: 5-1-74

கனியவர் ஆய்ந்த கவின் இசை நற்றமிழ், காயவரால்
இனியெவர் காப்பர் எனமயக் குற்றே இருந்ததம்மா!
துனியவர் முட்டம் தொலைத்தொளிர் நித்திலச் சுந்தரேச
இனியவர் தம்மால் இசைமிக ஓங்கும் இசைத்தமிழே!

இவ்வாறு
அன்பன்
மணமேடு குருநாதன்.

Koviloor Digital Library

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு!"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு!" —வள்ளுவம்.

ஆய்வரங்கம்

பொருள்: 1.

தென்புலத்தார்

ஆய்வாளர்: 1.

திரு. மா. வைத்தியலிங்கன், க.மு.
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை"

—என்பது குறள்.

பரிமேலழகர் பெருமான், "பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்பு உடைய அறம் ஆம்" என்று உரையருளிச் செய்வர். மேலும் முன்னை ஈரிடமும் விளக்குவார் கூறுகின்றார், "பிதிரராவார் படைப்புக்காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி, அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென்புலத்தாரென்றார். தெய்வம்என்றது சாதியொருமை" என்றார். ஒரு சிறிதே ஆய்வோம்

மணக்குடவர்: பிதிரர் தேவர் என்பார்.

பரிதியார்: பிதிர்லோகத்தார்க்கும் வழிபடு தெய்வத்துக்கும் என்பார் (இவர் தெய்வத்தை ஒருமையாகக் கொள்வார் போலும்)

காலிங்கர்: தன்குடியில் இறக்கப்பட்ட பிதிர்களுக்கும், கடவுளர்க்கும் என்பர்.

Koviloor Digital Library

இனி (பிதிரர், தெய்வம் என்னும்) இவ்விரு சொற்களைப் பற்றிய ஆராய்ச்சி,

பிதிரர்: பித்ரு என்னும் வடசொல் தந்தையாகிய முன்னோனைக் குறிப்பது. அதனடியாகப் பிறப்பதாகலின் இச்சொல் காலிங்கர் உரைத்தவாறே பொருள் கொள்ளத்தகும். பரிமேலழகியார் உரையை ஏற்போமாயின் இடர்ப்பாடுகள் பல வந்துறும். அயனால் படைக்கப்பட்டவை என்பதாலேயே அவை வழிபாட்டுக் குரியதாதலில்லை. மேலும் அயன் படைத்தான் என்பது பௌராணிகம் அதுவுமன்றி உயிர்களை இறைவன் படைத்தான் என்பது இந்நாவலந் தீவிற்குரிய சமயங்கள் ஏலாத ஒன்று. இனிப் பிதிரர் என்பதை வடசொல்லடியாகப் பிறந்த ஒன்றாகக் காட்டினோமாயினும் அதனைத் தமிழ்ச் சொல்லாகக் கோடற்கு யாதோரிழுக்குமில்லை. பிதிர் என்னும் வினைநின்று தொழிற் பெயருணர்த்துஞ் சொல்லாய்ப் பிண்டத்தைக் குறிக்கும். அதனை உண்போர் பிதிரராவார்.

இறந்தார்க்குச் செய்யும் கடன் 'பிண்டோதகக்கிரியை' எனப் பெறும். இது பழங்காலத்தேயே நிலவிற்று.

தெய்வம் என்ற சொல்லுக்குப் பல பொருளுண்டு. பரம் பொருள், தேவர். சிறுதேவதைகள், ஊழ், 'அமானுடத்' தன்மை முனிவர் என்னும் பொருள்கள் உண்டு. இவை இப்பொருள வாதலை மேல் வரும் காட்டுகளால் அறிதல் கூடும்.

'வழிபடுதெய்வம் நிற்புறங்காப்ப'

'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' (தெய்வம் பலவாதல் காண்க)

'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்'

'தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்'

'தெய்வமால்வரை திருமுனியருள'

தெய்வமென்றாற்போல முனிவரைக் கடவுளென்றழைப்பது முண்டு. எனவே தென்புலத்தார் தெய்வமென்றவிடத்துக் கடவுளார்க்கும் என்றெழுதிய காலிங்கர் உரைக்கு இப்பொருள் கோடல் சிறக்கும்.

Koviloor Digital Library

இனிப் பிண்டோதகக் கருமம் செய்வது அறிவுக்குப் பொருந்துவதா தமிழர் மரபுக்கு ஒத்ததா எனின்? ஒவ்வாது என்பேம். அஃதியற்றுவதால் கூட்டைப் பிரிந்த உயிர்க்கு யாதோர் பயனுமின்றாகலின், அதனை வலியுறுத்தும் கருட புராண முதலியவை மனுமிருதி முதலியவையெல்லாம் மிகப் பிற்காலத்தன. திருக்குறள் முதலிய தமிழ் மறைகள் தேவார முதலிய அருணூல்கள் பிண்ட கருமத்தை வலியுறுத்தாது. அறத்தையே வலியுறுத்துவன. மறுபிறவியெடுத்து விட்ட உயிர்கட்கோ எட்டுணையும் இதனாற் பயனில்லை. ஆகவே தென்புலத்தார் இல்லின்கண் இறக்கப்பட்ட மூத்தோர் என்ற காலிங்கர் உரை தமிழர் அவர்காலத்துக் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுவதன்றி உண்மையாகாமை வெளிப்படை. அயனாற் படைப்புக் காலத்தே தோற்றுவிக்கப்பட்ட கடவுட்சாதி என்பது பரிமேலழகியாரால் கூறப்பட்ட புதுமை. இதனை விளக்குதற்குச் சான்றுகள் அகப்படமாட்டா. எனவே அதனையும் விடுதல் நலம். இனித் தென்புலத்தார் கடனும், தெய்வக்கடனும் கட்புலனாகாதவரை நினைந்துசெய்வன எனப் பரிமேலழகர் கூறியது நோக்கத்தக்கது.

''இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணையென்றும்

''துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை'' யென்றும்

இனி,

வள்ளுவனார் உரைத்தமைக்குப் பொருள்காண வடமொழிப்பாழி (ஆச்சிரம) வழக்கை வலியக் கொணர்ந்து சுமத்துவர் உரைகாரர் அனைவரும். திரு. வி. க. அவர்களோ கொண்டுங் கூட்டியும், வலிந்தும், நலிந்தும் பொருள் கொள்வர். மாணி வாழ்க்கை, மனை வாழ்க்கை, தொண்டு வாழ்க்கை, துறவு வாழ்க்கை என்பன அப்பாழிகள்.

முதற்பாட்டில் மூவர் என்பதற்கு இரண்டாம் பாட்டிலே வள்ளுவனார் விளக்கம் தருகிறார் என்று கொள்ளின் இவ் விடர்ப்பாடுகள் நீங்கும். கூறியது கூறலாகாதோ என்பார்க்கு ஒரு பொருளை வலியுறுத்தற் பொருட்டாகப் பலமுறையும் கூறுதல் சான்றோர்க்கு உடம்பாடேயன்றோ? என்க,

இரண்டாம் பாட்டில் இறந்தார்க்கு என்பதற்கு ஒருவரும் இன்றித் தன்பால் வந்திறந்தார் எனச் சிறவாத ஒரு பொருளைப்

Koviloor Digital Library

பரிமேலழகியார் கொண்டனர். மணக்குடவரும், பரிதியாரும் இறந்தார் என்பதற்குச் செத்தார். எனவே பொருள்கொள்வர். மற்றுக் காலிங்கரோ ஒராற்ருன் செய்யும் உரை சிறப்புடையதாகத் தோன்றுகின்றது.

முன் சொன்னவர்களேயன்றி (மூவகைப் பாழியாரேயல்லால்) ஒருதியம் அற்றநல் உடன்துறந்தார்க்கும், கடவுளைப் பற்றி நாணினைத் துறந்தார்க்கும், குடிப்பிறந்தாரால் ஒவ்வோர் காரணத்திறல் வெகுண்டு துறக்கப்பட்டார்க்கும் முற்பிறப்பின் கண் ஏற்றவர்க்கு ஈயாது இறந்த வறியோர்க்கும் கல்வியினுல் மிக்கோர்க்கும் புகலற்று இறந்தோர்க்கும் மற்று இல்வாழ்வான் என்று சொல்லப்படுவானே துணையாவான் 'என்றவாறு'. மற்று இறந்தாராவார் இவ்வுலகத்தின்கண் வறுமையைக் கடந்து மிக்க செல்வத்தையுடையார் இவர்க்குந்துணையென்றுமாம்.

இறப்பு-மிகுதி என்பதை உணர்வார்க்கு கல்வி, செல்வம், ஒழுக்கம், தவம் இவற்ருல் உயர்ந்தோர் இறந்தோர் எனப்படுதற்கு ஒக்கும் என்பதறிதல் எளிது. 'மாண்ட என் மனையொடு மக்களும் நிரம்பினர்', மாண்டநின் இற்புறுபேடை அணியத்தன் அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே!' என்பவற்றை நோக்குக. இப்பொருளே பட.

வருவதனை உணராராய் இறந்துபட்ட எனப்பொருள் கொண்டு இடர்ப்பட்டாரும் உளர்.

எனவே துறவோர், வறியோர், இவருள் அடங்காத கலைஞர், அறிவோர், புலவோரை இறந்தார் என உரைப்பது வள்ளுவனுர் திருவுள்ளத்துக் கொப்பது என்னலாம்.

தென்புலத்தார் தெய்வம் என்ற இரண்டினும் தெய்வம் என்றது கட்புலனுகும் கடவுளரை என்பது உறுதி. மயிலை சீனி வேங்கடசாமியவர்கள் இதனைத் தெளிவாகத்தம் அஞ்சிறைத் தும்பி நூலில் உணர்த்துகின்றனர். தென்புலத்தார் என்னுஞ் சொல்லுக்கு விளக்கம் தெரிந்திலது என்று அவரும் கூறிச் சென்றனர். ஆனல் தென்புலத்தார் பிதிரரல்லர், கட்புலனுகும் ஒரு கூட்டமே என்பதனை வலியுறுத்தினர்.

தென்புலத்தார் எனுஞ்சொல் சங்க இலக்கியங்களில் பயிலும் இடங்கள் காணல் வேண்டும். திருக்குறட் கருத்தினை உணர் வதற்கு அதனை ஒட்டியெழுந்த அவையே கருவியாகலான்,

Koviloor Digital Library

"தென்புல வாழிநர்க்கருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறூஅ தீரும்"

பண்டைத் தமிழர் தம் முன்னோரைத் தென்புலத்தார் என்று அழைத்தமையும் இறந்த முன்னோரிடம் தென்புலம் தென்னுலகு என்றும் கூற்றுவன் தென்திசைக்கிழவன், தென்றிசை முதல்வன், தென்புலக்கோன் என்று பெயர் பெற்றிருத்தலும்......எனத் தொடங்கிச் செல்லும் நெடுந்தொடர் ஒன்று பண்டைத்தமிழரே தென்புலத்தார் என்று அறிஞர் சிலர் கருதும் துணிபினைக் காட்டுகின்றது. அவ்வாறேல் மறைந்த நம் முன்னோரை வழிபடும் வழக்கமே தென்புலத்தார் கடன் என்றும் இவ்வாசிரியர் கருத்து. மணக்குடவர் முதலானோர் கருத்தோடு வேற்றுமையின்றி நடப்பது. ஆகவே புதுச்செய்தி ஒன்றும் ஆகாது.

மூவகைக் கருத்துக்களை இதுகாறும் கண்டோம். அவற்றை முறைப்படுத்துவோம்.

தென்புலத்தார் யார்?

1. அயனுற் படைக்கப்பட்ட கடவுட் சாதியார் பரிமேலழகர்
2. பிதிரர் பிற உரைகாரர்
3. கட்புலனாய் நம்மோடு வாழும் ஒரு குழுவினர் இன்னாரென்று தெளிந்துரைக்க இயலவில்லை. சீனி வெங்கடசாமி

தென்புலத்தார் யார் என்பது குறித்த எமது ஆராய்ச்சி:

எம் முடிபுக்குத் தூண்டுகோலாவார் சீனி. வேங்கடசாமி அவர்களே அவ்வாராய்ச்சி:

தென்புலத்தார், தென்புலவாழ்நர் என்னும் சொற்களால் விளங்குவது. இவர்க்கு இடம் தென்றிசை என்பதே. இவரை உணவுதந்து பேண வேண்டும் என்பது வள்ளுவர் திருவுள்ளம். ஐந்திடத்தினுள் முதலிடம் இவர்க்கு அளித்துள்ளமையின் உணவு இவரது முதல் தேவை என்பதால் என உய்த்துணர்தல் வேண்டும். அவர் யாராய் இருத்தல் கூடும்?

தமிழகத்தைக் கடல் கொண்டது.

"அடியிற்றன்னளவரசர்க் குணர்த்தி
வடிவேலெறிந்த வான்பகை பொறுது

Koviloor Digital Library

பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பது காண்க.

கடல்கொண்ட பகுதியின் பரப்பென்னே? என்பார்க்கு பஃறுளியென்னுமாற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரை நாடும் ஏழ் முன்பாலைநாடும் ஏழ் பின் பாலை நாடும், ஏழ் குணகாரை நாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றுரென்க என்னும் அடியார்க்கு நல்லாருரையால் பெறப்படும். கலித்தொகையில்

"மறிதிரை கொண்டு தன் மண் கடல் வௌவலின்"
என்று வருவதனையும் காண்க.

அன்று பெருவெள்ளங் கண்டஞ்சித் தம்மூர், உரிமை, உடமை, சுற்றம் முதலியவற்றை விடுத்து உயிர்பிழைத்தற்கு ஓடி வந்தவரைக்கண்டு வடக்கே இருந்தோர் தென்புலத்தோர் என்று அழைத்திருப்பரன்றே! பசியாலுலந்து திரிந்தவர்க்கு முதற்கண் சோறுபடைத்தலை அவர்தம் முதற்கடமையெனமதித்திருப்பரன்றே. அதுகாறும் தாம் கண்டுங் கேட்டுமிரா அளவில் பன்னூராயிரமக்கள் கடற்கோளுக்கஞ்சி வடபுலக்கண் வாழ்ந்திருப்பரன்றே! அவர்க்குத் தொண்டுபுரிதற்கென இளைஞர் முன்றேடிச் சென்றிருப்பரன்றே! அத்தொண்டினையே தமது முதற்கடமையென மதித்திருப்பரன்றே! வங்கதேசத்துக்கண் பகைவர் தாக்குதற்கஞ்சி ஒருகோடிமக்கள் இன்று இப் பாரத நாட்டில் புகலிடம் தேடி வந்துள்ள இன்று நம் முதற்கடமையாக நாம் மதிப்பது யாது? நமது வரவுசெலவுக் கண் முதலிடம் பெறுவதுயாது அவர்தம் நல்வாழ்வேயன்றோ! ஆதலின் அப் பண்டைக் கடற்கோள் நாளில் வடபுலக்கண் அடைக்கலம் புக்காரைத் தென்புலத்தார் என்றாராகப் பிற்றை நாளில் அவ்வாறே கடற்கோளுக்கஞ்சியும், மாற்றார் தாக்குதற்கஞ்சியும், வற்கடம் பரவுதற்கஞ்சியும், ஆற்றுப் பெருக்குக்கஞ்சியும் நோய்கட்கஞ்சியும் பிறநாட்டுக் கண்புக்கவரையும், தென்புலத்தார் என்னத் தலைப்பட்டனர். எதிர்கொண்டு பேணுதல் மற்றை எல்லாக் கடமைகளிலும் முன்னின்றதாகலின் அதனைப் பெருங்கவனத்துடன் மேற்கொள்வாராயினர் நம்மநமை முன்றோர். போர் நிகழும் நாளில் அந்தணர், அறவோர், பசு, பெண்டிர், மூத்தோர் எனுமிவரை

Koviloor Digital Library

ஊரினின்றும் புலப் பெயர்த்தல் மரபாதலே புற முதலிய நூல்களான் உணர்க. அவ்வாறேல் அவரோடு கூடத் தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும் பொன் போற் புதல்வர்ப்பெருஅ தீரும் போமின்கள் என்ற தென்னையெனின் அவர்கள் ஆண்டான் இளையாராய்த்தப்போல் பிறர் துயர் துடைக்கும் மக்களை ஈன்றிடில் அல்லது அவர் பிறவிப் பயன் வாயாதது என்றமையை உட்கொண்டேயாமென்க அல்லதூஉம் புலப்பெயர்கின்றார்க்கு அருகிருந்து ஆந்துணையாவார் அவரேயாகலின் அவரையும் உடன்போமின் என்றார் என்க.

இவ்வாறே புலப்பெயர்ந்தோர் அனைவரையும் தென்புலத்தார் என்னல் மரபாயிற்று. எள்ளிலிருந்து பிழிந்ததே எண்ணெய் ஆயினும் தேங்காயினின்றும் கடலையினின்றும் பிழிந்தெடுக்கப் பட்டதும் எண்ணெய் எனக் குறிக்கப் பெறுமாறுபோல.

இதனால் திசைக் கருத்தின்றிப் பொதுவாகத் திக்கற்றோர் யாவரையும் தென்புலத்தார் எனக் குறித்தார் என்னலாம். அக் காலப் போர் முதலியவற்றால் இந்நிலை அடிக்கடி ஏற்படுவது.

இனித்திருக்குறள் காண்க: தென்புலத்தார் தெய்வம் விருந்து
ஒக்கல் தான் என்றாங்கைம்புலத்தாறோம்பல்தலை.

தென்புலத்தார்: அகதிகள்
தெய்வம்: முனிவர்கள்
விருந்து: விருந்தினர்கள்
ஒக்கல்: சுற்றத்தினர்
தான்: தன்குடும்பத்தினர்

எனும் ஐந்திடத்தும் அறத்தை வழுவாது செய்தல் தலையாய கடனும் இல்லறத்தானுக்கு.

வரன்முறையும் காண்க. எக்காலத்தும் திக்கற்றோருக்கு உதவுவதே முதற்கடமை என்பது திக்கற்றவனுக்குத் தெய்வமே துணையென்னும் பழமொழியது உட்கிடக்கையும் இஃது ஆம். தானும் தன் சுற்றம் வருந்தியும் அகதிகட்கு உதவிசெய்தல் வேண்டும் என்பது ஏனையோருக்குத் துணை எளிதில் கிடைப்பதாம். பேரளவில் வரும் இவர்க்கு யார்துணைவருவர்.?

இதனால் தென்புலத்தார் என்பார் (இக்காலத்துப் பொருளாற் கூறின் ஏதிலி(அகதி)கள் என்பதூஉம், அவர்க்கியற்றும் தொண்டு எல்லாவற்றினும் முதன்மையானதென்பதூஉம், ஐப்புலத்தாற்றுமறத்தில் தலையாயது அவர்தொண்டே என்பதூஉம் இயல்புடைய மூவர் என்பதனையே இரண்டாங் குறளில் துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்பதூஉம்.

Koviloor Digital Library

இறந்தார் என்பது மாண்டார் என்பதன் பரியாயச்சொல் என்பதூஉம், காளிங்கர் உரை அதனைப் ஒராற்றானும் உரைத்தது சிறப்புடையது என்பதூஉம், மயிலை சீனி. வேங்கடசாமியவர்கள்உரை எம்மைப் பொருள்காண வூக்கியது என்பதூஉம் கூறப்பட்டன. இது எம் சிற்றறிவாற் கண்டதேயாகலின் முற்றமுடிந்த தாகாது என்பதூஉம் பெரியோர் இதன் தகுதி, மிகுதிகளை ஆராய்ந்து தெருட்டத்தக்கார் என்பதூஉம் எளியேம் விண்ணப்பம்.



'நித்தில' உரை:—

ஆகத் 'தென்புலத்தார்' எனில் 'புலம்பெயர் மாக்களே!'' எனம் ஆய்ந்துரைக்கின்றார் இப் படைப்பாளர். இனி ஆய்வுலகப் பெருமக்கள் இத் தலைப்பையொட்டி தென்புலத்தார் யாவர்? தங்கள் படைப்புகளையும் நித்திலத்திற்கு விடுத்து அவை 'ஆய்வரங்க'ங் காணட்டும். தொடரட்டும் இவ்வாய்வுப்பணி! துலங்கட்டும் மெய்ப்பொருள் நனி!

'நித்தில'த்தார்.

Koviloor Digital Library

வேரிலும் கலைப்பொருள்கள்

ஏ. பி. கலாநிதி, பாபநாசம்.



உலோகத்திலும் மரத்திலும் சிற்பங்கள் செய்வது போல் செடியின் வேரிலும் சிற்பங்கள் செய்கிறார்கள் எல்லாச் செடியின் வேரிலும் சிற்பங்கள் செய்யப் படுவதில்லை. குறிப்பாக வெள்ளெருக்கன் செடியின் வேரில்தான் சிலைகள் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் விநாயகர், முருகன், லட்சுமி, பெருமாள் என்று தெய்வங்களின் உருவங்கள்தான் இந்த வேரில் செய்யப் படுகின்றன, இந்த வேரில் செய்வதால் நல்ல அருள் கிடைக்கும் என்று பெரியோர்களால் சொல்லப்பட்டு, அதன் நம்பிக்கையால் பூசைகளும் செய்யப்பட்டு வருவதை பலர் அறிந்திருக்கிறார்கள் இப்படிப்பட்ட வெள்ளெருக்கன் வேரில் தெய்வங்களைச் செய்யும் சிற்பியார் தஞ்சை மாவட்டம், பாவநாசம் திருப்பாலைத் துறையில் வசித்து வருகிறார்கள். (இவர் வயது 30) இவர்கள் முன்னோர்கள் இதே தொழிலை செய்து வந்த பாரம்பரியத்தினால்தான் இப்படிப்பட்ட கலையை தாங்கள் செய்ய முடிகிறது என்று சொல்கிறார். வேரில் செய்யப்படும் சிற்பங்கள் மிகவும் சிறிய அளவில்தான் இருக்கும். அதாவது கட்டைவிரல் அளவில்தான் இருக்குமாம் இப்படி கட்டைவிரல் அளவில் சிற்பங்கள் செய்ய மிகுந்த திறமையும் பொறுமையும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு சின்னக்கோடு கூட சிற்பத்தை கெடுத்துவிடுமாம். இந்த சிற்பங்களை செய்ய, பொடிப் பொடியான ஆயுதங்கள் கைக்கடிகாரத்திற்கு உபயோகிக்கப்படுவதுபோல் அவ்வளவு நுணுக்கமாக வைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட சிற்பக் கலைக்கு வெளி நாடுகளில் நல்ல ஆதரவு இருந்து வருகிறதாம். இந்தியாவைப் பொருத்தவரை சிற்பியார்களுக்கு ஆதாயம் இல்லாமலேயே பொழுது கழிந்து வருவதாக

Koviloor Digital Library

வருத்தத்துடன் சொலலப்படுகிறது. சிலேகள் சிறியதாய் இருந்தாலும் வேலேகள் அனைத்தும் செய்யப்பட்டிருக் கும். இதில் மற்ற அனைத்துக் கலைப்பொருள்களும் செய்யப்படுகின்றன!

குடந்தைசுந்த ரேசனென்ற கொஞ்சுமிசைக் கோவே!
படந்தரும் பாம்பணியோன் பக்தா!—நடந்துங்கள்
போற்றுதிருப் பாடல் பொதிந்தபே ரின்பமுயர்ப்
பேச்சுநேற் றஃதொன்றே பீடு.

பீடுநடை போடுமுயர் பேரரு ளாளனைந்தத்
தோடுடையான் தோகையைத் தோத்தரிக்கும்—ஆடும்
இசைக்குயில் மந்நையே! என்றேனே! உன்றன்
திசைக்குயர்வு உன்றல் தெரி.

வள்ளுவமும் செந்தமிழும் வாழ்கின்ற நாள்வரைக்கும்
வல்லவநும் பேர்வாழ வாழ்த்துகின்றேன்—தெள்ளுதமிழ்
யாப்பிவையால் என்றன் எழில்வே லவனைக்கை
கூப்பிப் பணிந்து குழைந்து.

அன்பன்,

சட்டமுத்தன்,
திருவள்ளுவர் கழகம்.
சிவகிரி (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

கேள்விச்செல்வம்!

"கல்கி" இப்பெயரை அவர் தமக்கு எவ்வகையில் அமைத்துக்கொண்டார்?

1. கல்மேடு (ஊர்ப்பேர்) — கிருட்டிணமூர்த்தி.
2 கல்யாணி (மனைவியின் பெயர்) — கிருட்டிணமூர்த்தி.
3. "கலியுகத்தின் கல்கி அவதாரம்"

இம்மூன்றில் எவ்விடை சரி?

(விடை 28 ம் பக்கம்)

Koviloor Digital Library

வள்ளுவன் கண்ட காமம்

(*பாவலர்* தும்பை — கனல்வேந்தி.)

ஐதே காமம்! வியப்பல் யாமே!
ஐதின் ஐதே! மொய்ம்பின் மொய்ம்பே!
நைந்திழி நெஞ்சர் மைந்திலி யாக்கை
நொந்தொழி வாழ்வுழைப் பொந்திகை மாந்தக்
கந்தொளி கொளீஇ வந்தொளிர் செம்மல்
தந்தமிழ் நாப்பண் தலைத்தலைத் தழூஉம்
வள்ளுவத் தீவம்! வானல ஓவம்!
விள்ளுதற் கரிதே விம்முமெந் நெஞ்சே!
வம்மினோ காணிய வள்ளுவக் காமம்! 9.

"தவறில ராயினுந் தாம்வீழ்" நெஞ்சாம்
"அவருறு மல்லன்னோய் காண்கஞ் சிறி"தெனக்
கதுவிய நெஞ்சார் 'உப்'பென் ஊடல்!
'முகிணிலைப் புலவி! ஊடதிர் ஊடல்!
முதிர்நிலைத் துனி'யென் முச்சுவை ஓர்சார் 14

கட்கின் பெண்ணிறைக் காவ லரணும்
வெட்குறு பீடும் வியத்தகு நாணும்
உட்குறு பாடும் உடனிகழ் பயிர்ப்பும்
"பன்மாயக் களவன் மணிமொழி"க் காற்றா
இன்மாயக் களனா இரிதரல் ஓர்பால் 19.

சின்மாயக் குதலைச் சிணுங்கல் சிந்தும்
புன்மாய குரல்! பொருள்பொதிந் தாங்கே
அளிவிழைந் திரக்கும் விழிமலர்க் காட்சி!
ஆயிடை ஆற்றா நோயிடைப் பீடுரன்
ஊழ்தரும் ஆணவம் உடைபடல் ஓர்புடை; 24.

Koviloor Digital Library

ஆவயின் —

அஞ்சுதலைத் தபுதி ஆரத் துய்க்கும்
"நெஞ்சுதனை யவிழ்ந்த" பொந்திகைக் குறிஞ்சி
"தம்மில் இருந்து தமதுபாத் துண்டெ"னக்
கிழமை வ ழ்வின் வேலை உவமை ! 28.

"மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை"யென
உற்றபுன் ஆற்றுமைச் சொற்றிற நெய்தல் !
"உற்றநாள் உள் நீஇ உறுநாள் நசைஇ"
ஆற்றிவாழ் முல்லை அருந்திறக் கற்பு; 32.

ஆவுழை —

கெழூமிய முழுவற் கழூமிய காமம்
விழுமிய வாழ்விற் பழுநில பயனு
'விழில் விழைநற் காழில் கனி'யான்
'வாழுந மென்னச் செருக்கா'ர் வாழ்வின்
வள்ளுவன் கண்ட காமம் !
நள்ளுமின் செவ்வியான் கொள்ளுமின் செம்மலே !



கேள்விச்செல்வம் ! உண்மை விளக்கம் !

அம்மூன்றும் பிழையே !

அவரின் ஊர் மணல்மேடே ! கல்மேடன்று !
அவரின் மனைவியார் உருக்குமணியாரே !
கல்யாணி அல்லள் மற்று
கல்யாண சுந்தரனர் (திரு. வி. க) மாணவர்
கிருட்டினமூர்த்தி என்பதே உண்மை விளக்கமாகும்.

(திருவாரூரில் திரு வி க. உருத்திரப்பு விழாவில் 2—12—73இல் திரு. நாரண. துரைக்கண்ணனர் விளக்கியமை)

Koviloor Digital Library

முப்பாலதிகார அடைவு மூவைம் மண்டிலம்!

(*பாவலர்.* மருதநல்லூர் மலரவன் — *மயிலாடுதுறை.*)



1. அறத்துப்பால்

1 கடவுள் வாழ்த்து வான்சிறப்பு கவினர் உல்தநீத் தார்பெருமை
உடனுறை அறன்வலி யுறுத்தல் இல் வாழ்க்கை வாழ்க்கைத்
துணைநலமே
கடனறி நன்மக் கட்பேறு கனிவு கொடுக்கும் அன்புடைமை
படிமிசை நாளும் விருந்தோம்பல் பாங்குடன் இனியவை
கூறலுமே

2 மறவா செய்ந்நன் றியறிதல் மனத்து நடுவு நிலை(மை) நின்று
திறம்பா அடக்க முடைமையுடன் தேர்ந்த ஒழுக்க
முடைமையால்
பிறனில் விழையாப் பேராண்மை பொறையுடை மைஅழுக்
காருமை
வெறுக்கும் வெஃகா மைபுறம்கூ றுமை பயனில சொல்லாமை

3 வேண்டா செய்தீ வினையச்சம் விருப்பி நல்ஒப் புரவறிதல்
தூண்டா மணிவி ளக்கிகை தொடரும் புகழே எக்காலும்
மாண்டார் கூறும் அருளுடைமை மன்னுயிர் வாழப்
புலான்மறுத்தல்
ஈண்டே பிறப்பறுக் குந்தவமே ஏனே பிணிகூ டாஒழுக்கம்?

4 கள்ளாமை மைபோக் கும்வாய்மை காக்க வேண்டும்
வெகுளாமை
உள்ளம் இன்னா செய்யாமை உயர்வு கொடுக்குங் கொல்லாமை
எள்ளும் நிலையாமை துறவே என்னும் ஆழ்ந்தே மெய்யுணர்தல்
உள்ளும் பெரிய அவா அறுத்தல் ஊழ்வினை யோடு
அற(ம்) முடிவே !

Koviloor Digital Library

2. பொருட்பால்

5 இறைவனுக்(கு) ஒக்கும் இறைமாட்சி ஈடிலாச் செல்வ
மாக்கல்வி
உறைபவன் கல்லாமை நின்றால் உணர்ந்திட கேள்வி
பயனாமே !
அறிவுடை மைகுற் றங்கடிதல் அறிவிற் பெரியார்
துணைக்கோடல்
சிற்றினஞ் சேராமையோடு செயல்வகை கண்டு வலியறிதல்

6 காலமறிதல் இடனறிதல் கடமை நாப் தெரிந் தேதெளிதல்
'சில' ந் தெரிந்து வினையாடல் சுற்றந் தழால்பொச் சாவாமை
ஞாலம் போற்றுஞ் செங்கோன்மை நலிவைக் கூபடுங்
கொடுங்கோன்மை
மால்வெரு வந்த செய்யாமை மாந்தர்க் குரித்தே கண்ணோட்டம்

7 திறமையோடு ஒற்றாடல் தீர ஊக்க முடைமையே
வறுமை போக்கு மடியின்மை வாழ்வே தருஆள்
வினையுடைமை
மறந்தும் இடுக்கண் அழியாமை மன்னன் விரும்பும்
நல்லமைச்சு
அறிஞன் ஆளுஞ் சொல்வன்மை ஆர்க்கும் வேண்டும்
வினைத்தூய்மை

8 வினைத்திட் பம்வினை செயல்வகையே வேந்தன் அனுப்புந்
தூதுடனே
பணிவொடு மன்னரைச் சேர்ந்தொழுகல் பகுத்துப் பார்த்தே
குறிப்பறிதல்
தனிமிகக் கற்றோர் அவையறிதல் நண்ணும் பேரவை
யஞ்சாமை
பிணிவறு மையுமில் லாநாடு பெரிய அரண்பொருள்
செயல்வகையும்

9 படைமாட்சி யஞ்சாப் படைச்செருக்கு பாங்காம் நட்புநட்
பாராய்தல்
கொடையாம் பழைமை தீநட்போ கூடா நட்பு பேதைமையே
உடன்வேண் டாப்புல் லறிவாண்மை ஒரும் இகலுடன்
பகைமாட்சி
விடவே பகைத்திறம் தெரிதலுமே வேரற முனைக உட்பகைக்கே

Koviloor Digital Library

10 நற்பெரியாரைப் பிழையாமை நயவா தேபெண் வழிச்சேறல்
பொற்பழிக் கூப்வரை வின்மகளிர் பொருந்தா மாற்கள்
ளுண்ணுமை
இற்பழி வருமே சூதாலே இரை அள வுண்டால் ஏன்மருந்தே ?
சொற்றுழிக் காட்டும் அக்குடிமை தூயவாழ்க்கை மானமதே !

11 பிழைசெய் பார்க்கே பெருமை வரும் பேணுசான் ருண்மை
பண்புடைமை
வினையாள் நன்றியில்செல்வம் விழைகவே நல்ல நாணுடைமை
அழைக்கும் குடிசெயல் வகைவழுவு அறவெறுத் திடுமே
நல்குரவால்
பழிக்கும் இரவு இரவச்சம் பாழ்கயமையார்
பொருள் முடிவே !

3. காமத்துப்பால்

12 தகையணங் குறுத்தல் குறிப்பறிதல் தழுவிய நற் புணர்ச்
சிமகிழ்தல்
வகையாய் அவர்நலம் புனைந்துரைத்தல் வேண்டுங் காதற்
சிறப்புரைத்தல்
மகிழ்ந்தோர் நாணுத் துறவுரைத்தல் மதித்தி டார்அலர்
அறிவுறுத்தல்
மகிழ்வே கொல்பிரி வாற்றமை ம ழ்குப் மனப்படர்
மெலிந்திரங்கல்

13 காதலர்க் குண்டே கண் விதுப்பழிதல் கவின்போய் பசப்புறு
பருவரலால்
நோதல் செய்தனிப் படர்மிகுதி நினைந்தவர் புலம்பல் ஆகிநமால்
தோதாய்க் கனவுநிலை உரைத்தல் தொலையாப் பொழுது
கண்டிரங்கல்
பேதை உறுப்பு நலன்ழிதல் பிரிந்தவர்க் கேநெஞ் சொடுகிளத்தல்

Koviloor Digital Library

14 நிறையழி த(ல்)அவர் வயின்விதும்பல் நெஞ்சந் தான் குறிப்
பறிவுறுத்தல்
குறுகுறுக்கும் புணர்ச்சிவிதும்பல் கூடின வர்நெஞ்
சொடுபுலத்தல்
முறையாய்ப் புலக்கு மப்புலவி முனுமுனுக் குப்புல
வி நுணுக்கம்
நிறையாய் ஊடல் உவகையுடன் திகழும்
இன்பம் நிறைவாமே !

4. அடைவு

15 அறம் பொருள் இன்பம் என்ன ஆன்ற முப்பால்
உள்ளே
திறம் பெறத் திகழ்ந்திருக்கும் திருநூற்று முப்பான் மூன்று
அதிகார நிரலே யாக அகமாரப் பாட மாக
இதுகாறும் யாத்து வந்தேன் இயல்பிழைக் கருளுவீரே !

 **கழக்கமாய் வருக !** 

ஒள்ளொளி விளக்கம் ஓங்கு வீதியில்
நள்ளிராக் காவலர் நடைபெயர்ப் பொலியும்
உள்ளுறுப் பிலங்க உடுத்தரங் காடும்
கள்ளிதழ்க் கன்னிகையர் கலைவிழாக் கண்டுமீள்
தளர்நடை மாந்தர் தகவிற் கூச்சலும்
உளர்கள் மாந்துநர் உரப்பலும் மலிதலான்
ஐவகை இலக்கணம் அமைவுறப் பயின்று
மெய்நிலை தேறிய மென்றமிழ்ப் புலவ !
பொன்னும் மலிந்த; பொருளும் மலிந்த;
உன்னும் நெஞ்ச உயர்ந்தோர்ப் புதுவை
நலங்கிளர் தலைவிக் கலரெழுந் துலவுமால்
கலங்குல வான்ற கழியின் வங்கக்
குரைகடல் திரைபொரு குடும்ப விளக்குத்
தமிழ்ப்பா வேந்தர் கழக்கம்
கழக்கமாய் வருக தமிழ்க்குநாட் பகலே.

Koviloor Digital Library

புலவர் மா. திருநாவுக்கரசு, திருமழபாடி.

கந்தனைப்போல்.........

உலகம் சுற்ற கந்தனுமே
ஓர்நாள் சென்ருன் நடந்தும்மே.
பகலும் இரவும் நடந்தானே
பள்ளம் மேடும் கண்டானே.
புகழ்ச்சி இகழ்ச்சி சொல்வோரை
போற்றித் தூற்றிச் சென்ருனே.
மகிழ்ச்சி துக்கம் அடைந்தானே
மன்னரும் ராணியும் கண்டானே.
நாடு சிலபல சென்ருலும்
நல்லது கெட்டது உணர்ந்தானே.
சாவு வாழ்வு வந்தாலும்
சரியெனச் சொல்லும் கந்தனைப்போல்
அங்கே இங்கே அலையாமே
அனுதினம் காலை மாலையிலே
திங்கள் முடியான் அடியிணையே
திருந்த நினைப்போம் மறவோமே.

★★★

காட்டிலொரு கல்யாணம்

காட்டுராஜா வீட்டிலே
கல்யாணம் நடந்துச்சாம்.
குதிரைவந்து கனைச்சுகிட்டு
கும்மாளமும் போட்டுச்சாம்.
ஊளையிட்டு நரியுமே
ஊரையெல்லாம் கூட்டுச்சாம்.
கொக்கரிக்கும் கோழிவந்து
கூவிவர வேற்றுச்சாம்.
கத்திகிட்டு பசுவுவந்து
கரந்துபாலைக் கொடுத்துச்சாம்.
காக்கையெல்லாம் கரைஞ்சுகிட்டு
கண்ணுமையி கூட்டுச்சாம்.
உறுமிகிட்டு பன்றிவந்து
உள்ளேவர பாத்துச்சாம்.
காவலுக்கு நின்றநாயி
குரைச்சுக்குரைச்சு தொரத்துச்சாம்.

Koviloor Digital Library

JEMINI PRINTING HOUSE

FINE ART PRINTERS
AND
BINDERS

28, Mutt Street, KUMBAKONAM.
PHONE: 835

ஜே. என். சி. சுபீரியர் சீவல்



★ உருவில் அரும்பாய்
★ சுவையில் தமிழாய்
★ தன்மையில் இசையாய்
★ மென்மையில் அனிச்சமாய்

இலங்குவது
ஜே. என். சி. சீவல்
ஒன்றே!

3, 5. 10. 15, 20, 25 காசு பொட்டலங்களாகவும்,
50, 100, 250 கிராம் பொட்டலங்களாகவும் கிடைக்கும்.

Printed by M. Kasi Ammal by Power Agent M. S. Karthikesu,
at the Jemini Printing House, 28, Mutt St., (Phone: 835) Kumbakonam.
Edited & Published by P. Sundaresan, Pettai Nanayakkara St., Kumbakonam.